தென்னிந்தியத் திருச்சபை - சென்னைப் பேராயம்

# இம்மானுவேல் ஆலயம்

35, தங்கம் காலனி, அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 040.

## திருச்சபை மாத இதழ்

## மார்ச் 2025

''மனுஷன் உலகம் முழுவதும்
ஆதாயப்படுத்தி கொண்டாலும், தன்
ஆத்துமாவை (ஜீவனை) நஷ்டப்படுத்தினால்
அவனுக்கென்ன லாபம்?''

மத்தேயு 8:36

# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | பொருளடக்கம் | 2 |
| 2. | ஆயர் மடல் | 3–4 |
| 3. | மார்ச் மாத ஆராதனை ஒழுங்குகள் | 5,6 |
| 4. | ஐக்கிய சங்கங்களின் ஒழுங்குகள் | 7 |
| 5. | திருநாட்கள் மற்றும் சிறப்பு நாட்கள் | 8 |
| 6. | வேதம் என் வெளிச்சம் – வேத வினா | 9 |
| 7. | கடந்த மாத பதில்கள், விடையெழுதியவர்கள் | 10,11 |
| 8. | ஆகமங்களில் பெண்கள் | 12–14 |
| 9. | பாடல் பிறந்த கதை | 15,16 |
| 10. | **BIBLE STUDY** | 17–19 |
| 11. | **CHILDREN'S CORNER** | 20–22 |
| 12. | பிறந்த நாள் காண்போர் | 23–26 |
| 13. | திருமண நாள் காண்போர் | 27,28 |
| 14. | பணித்தளங்களின் ஆராதனை ஒழுங்குகள் | 29 |
| 15. | பணித்தள செய்திகள் | 30–32 |

# ஆயர் மடல் ✍

கர்த்தருக்குள் அன்பார்ந்த,

இறை மக்களுக்கு இறை மைந்தன் இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன். பிப்ரவரி மாதம் ஆண்டவர் நம்மை அற்புதமாக வழிநடத்தினார். நமக்கு சுகத்தை கொடுத்தார். நம்முடைய தேவைகளை சந்தித்தார். சமாதான வாழ்வை நமக்கு கட்டளையிட்டார். ஆண்டவருக்கே கோடாகோடி ஸ்தோத்திரங்கள். இந்த மாதமும் நம்மை ஆசீர்வதிப்பாராக. குறிப்பாக மார்ச் 5ம் தேதி **சாம்பல் புதன்** நாளிலிருந்து ஆண்டவர் கிருபை உபவாசம் இருப்பதிலும், ஜெபிப்பதிலும், வேதம் வாசிப்பதிலும் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம்.

**உபவாச நாட்கள்:**

மத்தேயு 8:36 - வசனத்தில் இப்படியாக வாசிக்கிறோம். ''மனுஷன் உலகம் முழுவதும் ஆதாயப்படுத்தி கொண்டாலும், தன் ஆத்துமாவை (ஜீவனை) நஷ்டப்படுத்தினால் அவனுக்கென்ன லாபம்?''. இந்த உபவாச நாட்களில் இயேசுவுக்கு பிரியமான வாழ்வை வாழ்வோம். மீகா 6:6-8 வசனங்களில், நம்முடைய அன்றாட வாழ்வில் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார். உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாக வாழ்வதல்லவா, அது மட்டுமன்றி, எபேசியர் 5:10 வசனத்தின்படி கர்த்தருக்கு பிரியமானதை செய்யுங்கள். இந்த 40 நாட்கள் இந்த ஆண்டிலும் உபவாச நாட்களை பிரயோஜனம் செய்வோம். யோவேல் 1:14ம் வசனத்தில், ''பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்''. யோவேல்

2:12,13ம் வாசிக்கிறவண்ணமாக, ‘‘நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும், உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் உரைக்கிறார். அதுமட்டுமல்ல, யோவேல் 2:13 ‘‘உங்கள் வஸ்திரங்களை அல்ல, உங்கள் இருதயத்தை கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள் என்றார். இப்படியாக நாம் ஆண்டவரிடத்தில், உண்மையான ஆன்மீகத்தில் நிலைத்திருப்பதும், ஆசீர்வாதமாக இருக்கவும் ஆண்டவர் நம்மை அற்புதமாக நடத்துவாராக.

நமது சபையின் மூலம் கடந்த மாதத்தில் நடைபெற்ற ஊழியங்களுக்காக ஆண்டவரை ஸ்தோத்தரிப்போம்.

★ பெண்கள் ஐக்கியத்தின் மூலமாக ‘‘வெங்களத்தூர்’’ ஆந்திராவில் உள்ள மாத்தாம்மா பெண்மணிக்கு உணவு மற்றும் மளிகை பொருட்கள் வழங்கப்பட்டிருக்கிறது. பெண்கள் ஐக்கிய மக்களை வாழ்த்துகிறேன்.

★ ஆண்கள் ஐக்கிய சங்கத்தினர், வில்லுப்பாட்டின் வழியாக நமது பணித்தளங்களான ஜெ.ஜெ. நகர் மற்றும் விளங்காடுபாக்கம் என்ற கிராமங்களில் ஊழியம் செய்தனர். அநேக மக்கள் இயேசுவை அறிந்து கொண்டனர்.

★ வெங்களத்தூர் என்ற கிராமத்தில் நமது சபை மக்கள் மூலம் சுவிசேஷ ஊழியமும், மருத்துவ ஊழியமும் மிக சிறப்பாக நடைபெற்றது. 125 மக்களுக்கு மேலானோர் மருத்துவ சிகிச்சை பெற்றார்கள்.

★ பணித்தளமான புளியம்பேடு என்ற இடத்திலும் சுவிசேஷ ஊழியமும், மருத்துவ ஊழியமும் நடைபெற்றது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

இந்த ஊழியங்களை ஊக்கப்படுத்தின நமது சபையின் மருத்துவர்களை வாழ்த்துகிறேன். செவிலியர்கள், மருத்துவ உதவியாளர்களை வாழ்த்துகிறேன்.

நமது கமிட்டி அங்கத்தினர்கள், நமது பணித்தள ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜாசிங் மற்றும் திருமதி விமலா மாதவன் அம்மையாருக்கு என் வாழ்த்துக்கள்.

சென்ற மாதம் சிறப்பாக நமது ஆலயத்தில் Sisters' fellowship அம்மாமார்களுக்கும், சிறப்பு முகாம் நமது ஆலயத்தில் நடைபெற்றது. சுமார் 40 அம்மாமார்கள் பயனடைந்தனர். இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக.

அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த நமது ஆலய செயலர், பொருளர் இவர்களை வாழ்த்துகிறேன். தொடர்ந்து நமது பணித்தளத்தில் சுவிசேஷ ஊழியத்தை செய்யும் மிஷனெரிகளையும், அவர்களின் குடும்பத்தையும் நினைவுகூருங்கள், ஜெபியுங்கள்.

ஆண்டவர் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்
அருட்பணியாளர்
அருள்திரு. அறிவர். V. **ஜான் செல்வராஜ்**
அருட்பணி G. **கல்யாணி செல்வராஜ்**



## 2025 மார்ச் மாத ஆராதனை ஒழுங்கு முறைகள்

| | | |
|---|---|---|
| **1.3.2025 சனி**<br>காலை 6.00 மணி | **மாதத்தின் முதல் நாள்**<br>திருவிருந்து வழிபாடு | சங்கீதம் |

| | | |
|---|---|---|
| **2.3.2025** | **Bible Sunday** | **முதல் ஞாயிற்றுக்கிழமை** |

**லெந்து : மீட்புக்கான ஒரு காலம்**

LENT: Time of Redemption

ஏசாயா 58:1-4 — ரோமர் 2:1-13

சங்கீதம் 6 — யோவான் 5:1-9

காலை 7.00 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர் / ஆயரம்மா

காலை 9.00 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர் / ஆயரம்மா

மாலை 6.30 மணி - English Service - ஆயர்

| | | |
|---|---|---|
| **5.3.2025** | | **சாம்பல் புதன்கிழமை** |

**சிலுவை ஈடு செய்யும் துன்பத்துக்கான ஒரு அழைப்பு**

CROSS: A Call to Vicarious Suffering

1 இராஜாக்கள் 17:12-24 — பிலிப்பியர் 2:1-11

சங்கீதம் 102 — மாற்கு 8:31-38

**7.3.2025 லெந்து முதல் வெள்ளி** — இரவு 7.00 மணி

லூக்கா 9:1-3, லூக்கா 10:1-11

| | | |
|---|---|---|
| **9.3.2025** | | **இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை** |

**புறந்தள்ளப்பட்டவர்களோடும் விளிம்பு நிலையில் உள்ளவர்களோடும் இருத்தல்**

Being without Casts and Mariginalized

எஸ்தர் 4:1-12 — அப்போஸ்தலர் 15:12-22

சங்கீதம் 43 — மாற்கு 1:40-45

காலை 7.00 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர் / ஆயரம்மா

காலை 9.00 மணி - பொது வழிபாடு - ஆயர் / ஆயரம்மா

மாலை 6.30 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர்

**பொறுப்பு:** இளம் இல்ல ஐக்கிய சங்கம்

| **14.3.2025 லெந்து 2ம் வெள்ளி** | இரவு 7.00 மணி |
|---|---|
| மத்தேயு 23:13-36 | |

| **16.3.2025** | | **மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை** |
|---|---|---|

**பாவ சுமையிலிருந்து விடுவித்தல்**

Releasing from the Burden of Sin

2 சாமுவேல் 12:1-14 — அப்போஸ்தலர் 8:9-25

சங்கீதம் 32 — மாற்கு 2:1-12

காலை 7.00 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர் / ஆயரம்மா

காலை 9.00 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர் / ஆயரம்மா

மாலை 6.30 மணி - பொது வழிபாடு - ஆயர்

**பொறுப்பு:** பெண்கள் ஐக்கிய சங்கம்

| **21.3.2025 லெந்து 3ம் வெள்ளி** | இரவு 7.00 மணி |
|---|---|
| மத்தேயு 26:31-35, மத்தேயு 26:20-25, | |

| **23.3.2025** | | **நான்காம் ஞாயிற்றுக்கிழமை** |
|---|---|---|

**எல்லைகளை கடந்து பற்றுமையை அங்கீகரித்தல்**

Acknowledging Faith Beyond Boundaries

ஏசாயா 44:28-45:8 — அப்போஸ்தலர் 10:24-33

சங்கீதம் 125 — மத்தேயு 15:21-30

காலை 7.00 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர் / ஆயரம்மா

காலை 9.00 மணி - பொது வழிபாடு - ஆயர் / ஆயரம்மா

மாலை 6.30 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர்

**பொறுப்பு:** ஆண்கள் ஐக்கிய சங்கம்

| **28.3.2025 லெந்து 4ம் வெள்ளி** | இரவு 7.00 மணி |
|---|---|
| மத்தேயு 26:31-35, மத்தேயு 26:20-25, | |

| **30.3.2025** | | **ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை** |
|---|---|---|

**ஒடுக்கும் அமைப்புகளை மீட்டுருவாக்குதல்**

Transforming the Oppressive Structures

நாகூம் 1:1-15 — அப்போஸ்தலர் 4:32-37

சங்கீதம் 113 — லூக்கா 13:10-17

காலை 8.00 மணி - ஒருங்கிணைந்த வழிபாடு - ஆயர்/ஆயரம்மா

மாலை 6.30 மணி - திருவிருந்து வழிபாடு - ஆயர்

## ஆண்கள் ஐக்கிய சங்கம்

பிரதி செவ்வாய்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை, திருமறை ஆய்வு நடைபெறும்.

| | |
|---|---|
| 4.3.2025 | அருள்திரு. ஆயர் |
| 11.3.2025 | திரு. D. விக்டர் ஐசக் |
| 18.3.2025 | திரு. J.S. விசுவாசம் |
| 25.3.2025 | திரு. Dr. S. இராஜாசிங் |

## பெண்கள் ஐக்கிய சங்கம்

பிரதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு பெண்கள் ஐக்கிய சங்கம் நடைபெறும்.

| | |
|---|---|
| 1.3.2025 | ஆயரம்மா |
| 8.3.2025 | சிறப்பு செய்தியாளர் |
| 15.3.2025 | சிறப்பு செய்தியாளர் |
| 22.3.2025 | சிறப்பு செய்தியாளர் |
| 29.3.2025 | சிறப்பு செய்தியாளர் |

## இளம் இல்ல ஐக்கிய சங்கம்

பிரதி வாரம் சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு
இளம் இல்ல ஐக்கிய சங்கம் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 1.3.2025 | ஆயர் | 8.3.2025 | சிறப்பு செய்தியாளர் |
| 15.3.2025 | ஆயரம்மா | 22.3.2025 | சிறப்பு செய்தியாளர் |
| 29.3.2025 | சிறப்பு செய்தியாளர் | | |

## வாலிபர் ஐக்கிய சங்கம் (Youth Fellowship)

பிரதி ஞாயிறு இரண்டாம் ஆராதனைக்குப் பின் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 2.3.2025 | ஆயர் | 9.3.2025 | சிறப்பு செய்தியாளர் |
| 16.3.2025 | சிறப்பு செய்தியாளர் | 23.3.2025 | சிறப்பு செய்தியாளர் |

30.3.2025 சிறப்பு செய்தியாளர்

## சகோதரிகள் ஐக்கிய சங்கம்

பிரதி செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறும்.

❖ பாடல்கள் ❖ சாட்சி பகர்தல் ❖ திருமறை போதித்தல்

போன்ற நிகழ்வுகள் நடைபெறும்.

## திருநாட்கள் - மார்ச் 2025

| | |
|---|---|
| 5.3.2025 | ASH Wednesday<br>சாம்பற் புதன்கிழமை |
| 25.3.2025 | The Annunciation to Mary<br>கன்னிமரியாள் மங்கள வாக்குத் திருநாள் |

## IMPORTANT DAYS IN MARCH 2025

| | |
|---|---|
| 1.3.2025 | Zero Discrimination Day<br>World Civil Defence Day |
| 3.3.2025 | World Day of Prayer<br>National Defence Day<br>World Wild Life Day |
| 4.3.2025 | National Security Day |
| 5.3.2025 | International Women's Day |
| 9.3.2025 | No Smoking Day |
| 10.3.2025 | CISF Raising Day<br>World Kidney Day |
| 12.3.2025 | Central Industrial Security Force Day |
| 13.3.2025 | Common Wealth Day |
| 14.3.2025 | International Day of Action for Rivers |
| 15.3.2025 | World Consumer Rights Day<br>World Differently Abled Day |
| 16.3.2025 | National Vaccination Day |
| 20.3.2025 | International Day of Happiness<br>World Sparrow Day |
| 21.3.2025 | World Forest Day<br>World Poetry Day<br>International Day for Elimination of Racial Discrimination |
| 22.3.2025 | World Day of Water |
| 23.3.2025 | World Meterological Day |
| 24.3.2025 | World Tuberculosis Day |
| 27.3.2025 | World Theatre Day |

# வேதம் என் வெளிச்சம் – வேதாகம வினா

**1 இராஜாக்கள் 17-24 வரை**



1. கேரீத் ஆறு எதற்கு நேராயிருந்தது?
2. விதவையின் வீட்டில் செலவழிந்து போகாதிருந்தது எது?
3. கர்த்தர் எலியாவிடம், அவனை யாருக்குக் காண்பிக்கும்படிக் கூறினார்?
4. ஒபதியா போகும்போது வழியில் அவனுக்கு எதிர்ப்பட்டவன் யார்?
5. எத்தனை காளைகளைக் கொண்டு வரும்படி எலியா கூறினான்?
6. சர்வாங்க தகனபலி மற்றும் விறகுகளின்மேல் எவ்வளவு தண்ணீர் ஊற்றினான்?
7. எலியா தன் பிராணனைக் காக்க எங்கே போனான்?
8. சில குதிரைவீரரோடுங்கூடத் தப்பியோடிப் போனவன் யார்?
9. எலிசா தன் மாடுகளைவிட்டு யார் பிறகே ஓடினான்?
10. ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனைக் கொன்றுபோடுபவன் யார்?
11. யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனைக் கொன்றுபோடுபவன் யார்?
12. ஆகாபின் அரமனையண்டையில் இருந்தது என்ன?
13. பெனாதாத்தின் ஜனத்துக்கு எது ஈடாயிருக்கும் என்று தீர்க்கத்தரிசி கூறினான்?
14. எமோரியர் செய்தபடியெல்லாம் செய்தவன் யார்?
15. இஸ்ரவேலின் ராஜா எத்தனை தீர்க்கதரிசிகளை வரவழைத்து விசாரித்தான்?
16. ராஜாவின் குமாரனின் பெயர் என்ன?
17. ஆகாபை எங்கே அடக்கம் பண்ணினார்கள்?
18. ஆகாபின் இரத்தத்தை நக்கியது எது?
19. யோசபாத்தின் தாயின் பேர் என்ன?
20. யோசபாத்துக்குப் பின்பு ராஜாவான அவன் குமாரன் யார்?

---

**இதற்கான பதில்களை கீழ்க்காணும் email/whatsappக்கு அனுப்பவும். அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் எழுதிப் போடவும்.**

The answers for these questions can be sent to the email/whatsapp number given below. The answer can also be submitted in the box kept in the Church for this purpose.

Last date for submission: **15-03-2025**

| Email: deepatheodoredavid@gmail.com | WhatsApp: (+91) 94440 24628 |
|---|---|

## பிப்ரவரி - வேதம் என் வெளிச்சம் - சரியான விடைகள்

### சரியான விடைகள்

**1 இராஜாக்கள் 7-16 வரை**

1. சிம்ரி- 1 இராஜா 16:18
2. சிம்ரி - 1 இராஜா 16:10
3. பாஷா - 1 இராஜா 15:27
4. யெரொபெயாம் - 1 இராஜா 15:25
5. அகியா- 1 இராஜா 14:4
6. அபியா- 1 இராஜா 14:1
7. பெத்தேல்-1 இராஜ 13:11
8. தேவனுடைய மனுஷன் - 1 இராஜா 13:2
9. வாலிபர் -1 இராஜா 12:13
10. லட்சத்து எண்பதினாயிரம் - 1 இராஜா 12:21
11. மோளோகு -1 இராஜா 11:7
12. கேனுபாத் - 1 இராஜா 11:20
13. கேதுரு மரங்கள்- 1 இராஜா 10:27
14. 300 -1 இராஜா 10:17
15. கானானியர் -1 இராஜா 9:16
16. ஈராம் -1 இராஜா 9:12
17. ஏத்தானீம் -1 இராஜா 8:2
18. மோசே -1 இராஜா 8:9
19. ஈராம் -1 இராஜா 7:13
20. முப்பது முழ உயரம் - 1 இராஜா 7:2.

### சரியான விடையெழுதியவர்கள்

| | |
|---|---|
| 1 | Ms. S. Abi Rithiya |
| 2 | Mrs. Abiah Christolin |
| 3 | Mrs. Amanda.A |
| 4 | Mrs. Amudha John |
| 5 | Mrs. Annapushpam S |
| 6 | Mrs. Anushi |
| 7 | Mrs. Beulah James |
| 8 | Mrs. Beulah Suresh |
| 9 | Mrs. Chandraleka Albert |
| 10 | Mrs. R. Chitra Manohari |
| 11 | Mrs. Christal Esther D. |
| 12 | Ms. Dania Jency J. |
| 13 | Mrs. Darling Manohari J. |
| 14 | Ms. Deepika M. |
| 15 | Mrs. Devakirubai Thangadurai |
| 16 | Mr. Devanandhan P. |
| 17 | Mrs.Eben Rubert |
| 18 | Mrs.Esther Joshua |
| 19 | Mrs.Esther Raji.C |
| 20 | Mrs.Esther Subha.G |
| 21 | Ms. Evangeline R. |
| 22 | Mrs. Ezhil Anita Joseph |
| 23 | Mrs. Glory Arulkumar |
| 24 | Mrs. E. Glory Premila Suguna |
| 25 | Mrs. Glory Sundararaj |
| 26 | Mrs. Gnanatheebam Justin |
| 27 | Mrs. Grace Manuel |
| 28 | Mrs. Grace Pushpalatha |
| 29 | Mrs. Grizelda Sailor |
| 30 | Mrs. Hannah Duraiswamy |
| 31 | Mrs. Helan Juliet |
| 32 | Mrs. Hephzibah Selvi J. |
| 33 | Mrs. Hilda Francis P. |
| 34 | Mrs. Hymlin Rose S.G. |
| 35 | Mrs. Irene Nirmala |
| 36 | Mrs. Jayanthi S. |

37 Mrs. Jesi Selva S.
38 Mrs. Jeyakodi
39 Ms. Jacinth Gifty
40 Mrs. Janita Gnanaraj P.
41 Mrs. Jhansi Cerulo
42 Mr. John Rathnaraj V.
43 Ms. Joshna P.
44 Mrs. Joy Jasmine
45 Mrs. Joyce Durai
46 Mrs. Juliet Rajakumari D.
47 Mrs. Kiruba Jebastin
48 Mrs. Leela Gopi
49 Mrs. Lydia Allan
50 Mrs. Lisha Chandran
51 Mr. Mahendran Mahimaidoss E.
52 Mrs. Mala Isaac
53 Mrs. Malliga Rajanayagam
54 Mrs. Malliga Victor
55 Mrs. Manjula
56 Mrs. Mary Twinklin
57 Mrs. Mercy Kasinathan
58 Mr. Mohana Sekar
59 Mrs. Muthaparanam Sudharson
60 Mrs. Naveena Wilfred
61 Mrs. Padmavathy Gnanamanickam
62 Mr. Pratapsingh Sam Dawson P.
63 Mrs. Prema Samuel
64 Mrs. Prema Thanaseelan
65 Mrs. Premalatha Mohanraj Moses
66 Mrs. R.S. Premalatha
67 Mrs. Priscilla Maragatham
68 Mrs. Priscilla Selvaraj
69 Mrs. Punitha Azariah
70 Mrs. Punitha Thambiraj
71 Mrs. Rajamalar R.
72 Mrs.Rajapushpam.S
73 Mrs. Rajeshwari Durairaj
74 Mrs. Rajini Balasundaram
75 Mrs. Rani Pandian
76 Mrs. Reeta Christopher
77 Mrs. Reeta Joseph
78 Mrs. Reeta Sathyaraj
79 Mrs. Rosaline Samuel
80 Mrs. Renuka Joel
81 Mrs. Salomi Emden
82 Mrs. Shanti Prince
83 Mrs. Shanthi Wilson
84 Mrs. Sheeba John
85 Mrs. Sheela Ebenezer
86 Mrs. Shibi
87 Mrs. Sarojini Vincent E.
88 Mrs. Silvia Franklin A.
89 Dr. Mrs. Siron Landis N.
90 Mrs. Stella Emmanuel
91 Mrs. S. Stella Mercy
92 Mrs. Subha Jason
93 Mrs. Sudha Allwyn
94 Mrs. Suja Gerald
95 Mrs. Sugantha Andrew
96 Mrs. Suganthi Vanaraj
97 Mrs. Sulochana Albert
98 Mrs. Sunitha Vasantha Malini S.
99 Mrs. Surekha
100 Mrs. Suseela Anandan
101 Mrs. Sylvia Grace J.
102 Mrs. Thelma Isaac
103 Mrs. Vasanthi Pondurai
104 Mrs. Vasna Joshua
105 Mrs. Victoria S.
106 Mrs. Vijila Anto
107 Mrs. Vimala Madhavan
108 Breetha Stalin
109 Ms. Clarissa Stephanie Nirmal

**ஆர்வமுடன் பங்கு பெற்று, பதில் எழுதியோருக்கு பாராட்டுகள்!**

# மகத்துவமான மாமியார்

(நியாயாதிபதிகள் 13:1-24)

● திருமதி ஏஞ்சல் ஜோசுவா ●

இச்சூழ்நிலையில், தான் வேற்று தேசத்தில் வேற்று மனிதர் மத்தியில் தனிமையாகி விட்டதை உணர்ந்தவள், உடனேயே தன் சொந்த தேசமான பெத்லெகேமிற்கே சென்று விடவேண்டும் என்று ஆவல் கொண்டாள். உடனேயே தன் மருமக்களிடம் விடை பெற்று, அவர்கள் இருவரையும் தங்கள் தங்கள் பெற்றோரிடம் சென்று தங்களுக்கு இஷ்டமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்படி வேண்டினாள்.

என்ன ஆச்சரியம்! அவளின் இரு மருமகள்களும் அவளை விட்டுச் செல்ல மனமில்லாமல் அழுதனர் . எத்தனை அன்போடும், கரிசனையோடும் மாமியார் தன் மருமக்களை நடத்தியிருந்தால், இப்படியாக பிரிய மறுத்திருப்பர். இதுவே ஒவ்வொரு மாமியாரிடமும் தேவன் எதிர்பார்க்கும் தெய்வீக குணாதிசயம். தன் மருமகளை, நகோமி [ரூத். 2:2ல்] 'என் மகளே' என அழைக்கின்றாள். தன் பிள்ளைகளை பராமரிப்பது போன்று நேசித்து நடத்தியுள்ளாள். ஒரு நபர் நம் குடும்பத்தில் இணைக்கப்படும்போது, முதலாவது அந்தநபரை முழுமனதுடனே ஏற்றுக்கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏற்றுக் கொள்ளாவிடில் இருவருக்குமே வாழ்வு முழுவதும் சவாலாகத்தான் அமைந்துவிடக்கூடும். அன்புத்தாழ்ச்சி ஏற்பட்டு,

விட்டுக்கொடுக்க இயலாமல், சண்டை சச்சரவோடு, சமாதான குலைச்சல் எப்பொழுதும் குடும்பங்களில் காணப்படும் சூழ்நிலையே ஏற்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகையால் ஏற்றுக்கொள்ளுதல் ஒருவர் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும்.

அதோடே கூட நகோமி சுயநலத்தோடு செயல்படாமல் தன் மகன்களை இழந்த சூழ்நிலையிலும் தன் மருமக்கள் மீதும், அவர்களுக்கு இன்னொரு வாழ்க்கை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் அதிக கரிசனையோடு காணப்படுவதை நாம் முதலாம் அதிகாரம் வாசிக்கும்போதே புலப்படுகின்றது. ஒரு சராசரி மாமியாராய், என் மகன்களே இவ்வுலகில் இல்லை, இனி இவர்கள் எப்படி போனால் எனக்கென்ன என்று இருந்துவிடாமல், அவளின் இரு மருமக்களையும் அழைத்து, தங்கள் பெற்றோர் வீட்டிற்குச் சென்று வேறு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொள்ளும்படி வேண்டுகிறாள்.

இவளின் அன்பினால் தொடப்பட்ட இருவரும் மாமியை விட்டுச் செல்ல தயங்கினர். மூத்தவளான ஓர்பாள் முத்தமிட்டு சென்றபின், இளையவள் ரூத் அவளைவிட்டு செல்ல மறுத்துவிட்டாள். அவள் தன் மாமியாரை மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவளின் தேவனையும் ஏற்றுக்கொண்டதை நாம் ரூத் 1:16ல் வாசிக்கலாம். அந்நிய தேசத்துப் பெண்ணை ஜீவனுள்ள தேவனை கண்டு கொள்ளும்படியும், நேசிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் வழிவகுத்துள்ளாள் இந்த நகோமி. தன் இயலாமையை தன் மருமகளிடம் எடுத்துக் கூறி அவர்களை சம்மதிக்க வைக்க நினைத்தும், எடுபடவில்லை ரூத்திடம். மாமியாருக்கு உரிய

அகந்தை, ஆணவம், கண்டிப்பு, குறைகூறுதல், கோபம், வைராக்கியம் போன்றவை நகோமியிடம் காணப்படவில்லை. அதற்கு மாறாக அன்பு, அநுசரிப்பு, கரிசனை, தாடிநமை, விட்டுக்கொடுத்தல் போன்றவை நகோமியிடம் அதிகம் காணப்பட்டது. இதுவே இவளுக்கு ரூத் என்னும் புதிய உறவு ஏற்பட காரணமாயிற்று. தன் புதிய உறவோடு திரும்பவும் பெத்லெகேமிற்கு சென்று, மாரா என்று என்னை அழையுங்கள் என்று சென்றவள், சிறிது நாட்களுக்குள்ளேயே, இந்த புதிய உறவினால் போவாஸ் என்னும் இன்னொரு உறவும் புதுப்பிக்கப்பட்டு, முழுக் குடும்பத்தை பெறவும், தன் கரங்களிலே அவர்களின் கர்ப்பப்பிறப்பான ஆசீர்வாதத்தை ஏந்தவும் தேவன் வழி வகுத்ததை நாம் இப்புஸ்தகத்தின் மூலம் (ரூத்) அறிய முடிகிறதல்லவா!

அவ்வம்சத்திலேதான் உலக இரட்சகரான இயேசுவானவர் உதித்தார் என்று அறியும்போது எத்தனை பேறு பெற்றவள் இந்த நகோமி என அறிகிறோம். அவளின் பெயருக்கேற்ற வண்ணம் வாழ்வில் பேரின்பமும், களிப்பும், திரும்பவும் பெற்று பிரியமுள்ள ஒரு மாமியாராய் – அல்ல தாயாய் வாழ்ந்ததை நாம் அறிந்து தேவனை உளமார ஸ்தோத்தரிப்போமாக.

❃ ❃ ❃ ❃ ❃



# மென்மையாய் இயேசு அழைக்கிறாரே

*(எழுதியவர்: வில் க. தாம்சன்)*

நற்செய்தியால் உலகையே அசைத்த, பிரபல அமெரிக்கப் பிரசங்கியார் ஈ.க. மூடி, மரணத்தை எதிர்நோக்கிப் படுத்திருந்தார். வியாதியால் மரண அவஸ்தைப்பட்ட, தன் நண்பனைக் காண வந்திருந்தார் வில் தாம்சன். தன் கண்களை ஏறிட்டுப் பார்த்த மூடிப் பிரசங்கியார், தன் நண்பனை நோக்கி, ''வில், ஒன்று தெரியுமா? நான் என் வாழ்நாளில் செய்த ஊழியங்கள் அனைத்தையும்விட, இந்த அருமையான பாடலை எழுதுவதையே, மேலானதாகக் கருதுகிறேன்.''

ஏனெனில், மூடிப் பிரசங்கியாரின் உள்ளத்தைக் கவர்ந்த இப்பாடலானது, அவரின் நற்செய்திக் கூட்டங்களில், சாங்கியால் மென்மையாகப் பாடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களை, இயேசுவின் அன்பின் அழைப்பை ஏற்றுக் கொள்ளச் செய்திருந்தது.

வில் க. தாம்சன் ஒகியோவின் கிழக்கு லிவர்பூலில், 7.11.1847 அன்று பிறந்தார். போஸ்டன் இசைப் பள்ளியில் பயின்று தேறி, இசை வல்லுனரானார். பலதரப்பட்ட பாடல்களை இயற்றிப் புகழ் பெற்றார். பின்னர், கிறிஸ்தவப் பாடல்களையும் எழுத ஆரம்பித்தார். செல்வந்தராக பேரும் புகழும் பெற்ற பின்னரும், ஊழியங்களுக்குத் தாராளமாகக் கொடுத்து, எளிமையான பண்புடன், ஒரு நடைமுறைக் கிறிஸ்தவனாக வாழ்ந்தார். பல குக்கிராமங்களுக்கும் குதிரையில் சென்று, பாட்டுகள் பாடி, அவர்களை மகிழ்விப்பார்.

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், மிகவும் பிரபலமான இப்பாடலின் ராகத்தையும், வில் தாம்சனே அமைத்தார்.

Ref: தமிழ் கிறிஸ்தவக் களஞ்சியம்

BIBLE STUDY

*Mrs. Bindu Johnson Edwin*

# ISAAC - "LAUGHTER"

Isaac means laughter Abraham and Sarah named their son so for he was born to them at a very good old age, thinking that all will laugh at this news for they themselves had laughed when God announced the birth of their son.

Birth of Isaac was the long awaited fulfilment of God’s promise to Abraham. Although the human nature of Abraham and Sarah was involved in fulfilling this promise,(Hagar and Ishmael), God did not forget His promise and gave new life to them. Lord did for Sarah what he had promised.(Gen21:1). Abraham was hundred years old when Isaac was born. Through Abraham’s faith God miraculously created life in Sarah’s body which was old and worn. The birth of Isaac is a clear illustration of the rebirth of sinner who is dead in sin. Repentance, confession and faith in God creates a new life in the sinner and he is said to have been born again. (James 1:18, Gal 4:23,28,31)

*True faith and repentance creates new life!*

Isaac the miracle child and the promised seed was vehicle God used to test Abraham’s faith and love for him. We always commend Abraham for his faith and trust on God’s promises. Little do we think of Isaac’s part in this greatest test on faith of all times? Now, when God told Abraham to offer Isaac as a sacrifice, he was not an infant who cannot understand of things and events happening around him .He was a lad who could resist refuse and rebel , in short he could understand and analyse. They took a journey of three days in this journey the only conversation recorded between them is Isaac asking for the sacrificial lamb and Abraham telling him God will provide. Isaac entrusted himself completely to God’s love and wisdom. Isaac was not a victim. Though Abraham bound his son, and placed him on the altar, Isaac also offered himself to God as a burnt sacrifice.

How many times have children heeded to their parents, how many times they have shown resentment over the gifts you have given, dresses you have bought, or the food made at home?

Isaac's sacrifice is perhaps the most beautiful picture Christ in all of the Old Testament. When God provided the ram he as a sacrifice he experienced, God's love and mercy and power of God to resurrect the dead. Isaac experienced the foretaste of Christ's promise of rest, to all who come to him and take his yoke.(Mat 11:28-30)

"To fight God's will is a heavy burden it will leave you weary".

Jesus promises rest to all who are weary this does not mean the problem is gone, but because God is with the weary!

Isaac's marriage reveals his submission to God's will. He waited Instead of marrying any Canaanite women. Abraham's most trusted servant Elieazer was sent by Abraham to get a bride for his son Isaac from his brother Nahor's family. They did have the basic knowledge of the living god, since they had moved out of Ur the land of Chaldeans with Abraham and wished to settle in Haran. When Elieazer returned with the bride Isaac was meditating (gen24:62,63) possibly he was asking God to help him Establish family that honoured and followed God. He filled his mind with the thoughts of God's greatness.

*Prayer for guidance thru the circumstances of life must be for the will of God.*

In Rebecca the Lord gave Isaac the desire of his heart. She left her house to and joyfully joined Isaac to live and to be identified with the people of God.

*"It's not important how we die but it is important how we live"*

For twenty years Rebecca was infertile ,unlike Abraham and Sarah they did not try to help God by acting according to their institutions and instinct ,instead they patiently waited for God's time and Isaac in faith prayed for Rebecca, God opened her womb and honoured Isaac's faith by giving them twins (25:21-23)

Natural calamities like famine were common those days. When famine struck Like Abraham, Isaac too decided to move to Egypt but God commanded Isaac to stay at Gerar itself. Isaac needed to learn its Canaan not Egypt is the Promised Land. Isaac obeyed and planted crops during famine and received returns in hundred fold.

*Its not enough to share the experience of a wonderful father and grow up in Christian environment, all people need to meet the Lord personally!*

After God blessed Isaac abundantly in the famine he tested Isaac, the Philistines kept opposing on every well his men dug, but without losing heart he let the philistines keep the well and went forward reopening other wells, trusting God to make room for him in the land.(gen 26:22),finally Isaac found the well for which the philistines didn't claim ownership. This is true of believers, today Christ promises blessings spiritually with living water to those who trust ,which no one can stop.(john7:38-39).

- Isaac's miraculous birth is the true picture of the re birth of the sinful man.
- His sacrificial obedience to offer himself as a living sacrifice is foreshadow of Christ's submissive obedience to father's will.
- His trust on God's promise and twenty years of waiting, and prayer for Rebecca's infertility is the depiction of his patient faith.
- His decision to stay back during famine is his obedience to God's command and trust in his promises.
- Isaac's life speaks loud of his submissive obedience to God, and trust in his promises.

*What does your life speak of? A life of trust and obedience to God's world helps us experience his love protection, guidance, and provision.*

***Choice sure is yours!***

# CHILDREN'S CORNER

Open to all the children of our Church


(Not limited to Sunday school children alone).

**Colour the given picture :**

**Categories :** *Beginners: Age 3 yrs - 5 yrs. Primary: Age 6 yrs - 8 yrs.*

---

**JOHN 15 & 16**



---

NOTE: Kindly take print out of the picture in A4 Sheet for colouring.

**JUNIORS: 9 to 12 years -**
**Draw and color the picture of Vineyard.**

**WORD SEARCH: GOSPEL OF JOHN 13 and 14**
**Intermediate, Senior, Senior high - 13 years - 19 years.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| D | E | R | E | T | T | A | C | S | R |
| F | S | E | H | C | N | A | R | B | E |
| A | T | X | Z | D | H | K | G | E | W |
| T | D | R | A | Q | E | T | N | S | O |
| H | L | Q | U | W | Z | I | M | D | R |
| E | R | W | T | T | V | E | V | N | G |
| R | O | E | I | E | H | C | Z | E | E |
| C | W | T | U | V | E | A | L | I | N |
| A | G | R | R | R | S | E | C | R | I |
| V | T | N | F | E | L | P | J | F | V |

1. Jesus is the ______________. (8 letters)
2. Father is the _________ . (10 letters)
3. Jesus said I am the vine you are the________. (8 letters)
4. Those who abide in Jesus bear much___________. (5 letters)
5. Jesus said "No one has greater love than this, to lay down one's life for one's ________.(7 letters)
6. The advocate who will testify about Jesus is the spirit of _________. (5 letters)

7. Jesus said to the disciples the hour is coming, indeed it has come, when you will be , __________. (9 letters)

8. I am not alone because the ________________is with me. (6 letters)

9. I have said this to you so that in me you may have __________.(5 letters)

10. Jesus said "In the __________ you face persecution, but take courage: I have conquered the world". (5 letters)

## February 2025 Cross Word Answers

**Down**: 2. Hair 3. Fruit 5. Honour 6.Synagogue 9. Light

**Across**: 1. Bethany 4.Two 7. Weep 8. Four 10. God


***Those who wrote correct answers*.**

**Coloring**: Gianna Augustina B., Esther Jelina

**Drawing**: Jemima Sharon, Dania Jency J., Jeswin. S.

**Word Search:** P. J. Magline Sharabova, A. Amanda Jenny Gracia Deborah ,W. Darren Josh, J. Esther Jelina, J. Dania Jency.

Kindly send answers to 9884086788 before 15th of Every Month.



# *Birthdays*

**1-Mar**

Mr. J. David Jebaseelan
Mrs. D. Sheeba Rani Saldurai
Mr. G.R. Ebenezer
Mrs. T. Lalitha
Mr. M. Raja Ibrahim

**2-Mar**

Mr. Denish Ebinth Doss

**3-Mar**

Miss. Catherine Jennifer N.
Miss. C. Sharon Cecil
Mrs. Arunodhaya Gladwin
Mr. T. Madan Masilamani
Mr. E.J. Santhosh Babu
Mrs. Thangamalar Raja Jebarose
Miss. Gloria Abigail Samuel
Mrs. C. Muthu Selvi
Mr. Freddy Paul

**4-Mar**

Mrs. S. Jhansi Rani
Mrs. Sheeba Sharmilee
Mr. L. Kevin Jeff Raj
Master D. John Sam Solomom

**5-Mar**

Miss. Monica Angeline
Mr. R. Wilky Glover
Mr. J. Anand Jebasingh
Mr. J. Victor Dhanaraj
Miss. Anika Sharon
Mr. S.G. Christopher
Mrs. Hema Prabhakaran

**6-Mar**

Mr. S. Pandian
Miss. Juanita Judith
Mrs. Ranjini Victor
Mrs. Dr. Doreen Gnanam
Mrs. M. Benita Ponmalar
Mr. Alex Chandra
Master Theophilus Matthew T.
Mrs. Sarah David

**7-Mar**

Mr. Joseph Jebaraj
Mrs. Febi Elgiva
Mrs. J. Felcia Banu
Mrs. S.J. Hyma Ranchini
Mrs. Sangeetha Stella

**8-Mar**

Mrs. Jeya Sugantha Andrew
Mr. R. Christin Doyle
Mr. K. Dennis
Mrs. Glory Jerin
Mrs. J. Mahiba
Mrs. Linda Joy Benin

**9-Mar**

Mrs. Vimala Ratnaraj
Mr. A. Vasanthan Charles
Mrs. Arunthathi Joelsingh
Miss. Sharon Daniella Paul
Mr. J. Joshua David

Mr. C. Jayaseelan
Mr. D. Joel Jeya Singh

**10-Mar**

Mr. P. Henry Mesiah
Mr. P. Anton Joel
Mrs. Malar Daniel
Mrs. Jennita Jayakumari Gnanaraj
Mrs. Rebecca Shanthi Packianathan
Mr. Oliver Thomas
Mr. Joshua Sam Paulus
Dr. Mrs. Vaishnavi Nirmal John
Baby M. Magitha
Baby M. Aniesh

**11-Mar**

Mrs. Jhansi Eddy
Miss. Catherin Tephilla
Master Shrwin Joseph Prasanna
Mr. Abi David Anston

**12-Mar**

Mr. J. Samuel Joshua
Mr. Glover Surendran
Mr. J. Anandaraj
Master R. Simon Mathew
Mr. K. Abraham Linkan

**13-Mar**

Mr. B. Nelson Gnanadoss
Mr. Harris Dimello
Mrs. Honey Dew
Mr. Emmanuel Suganand
Mr. R. Ramalingam

**14-Mar**

Mr. J. Daniel Chellappa Gnanaselvam
Miss. J. Sandra J.Janakaraj
Mrs. R. Sophia
Master Jaedon Daniel Johnson
Mr. Suresh Kumar Moses
Mrs. Sheeba Sharmilee
Master Chris Davis
Miss. A. Analyn Jeeoni
Mrs. D. Janice Selva Clarinda

**15-Mar**

Mr. B. Edwin Samuel
Mrs. Saroja Jeya Thilak
Mrs. Vijay Priya David
Miss. A. Johanna Shirley
Mr. P. Alexander Dhanaraj
Master K. Sam Pradeep
Mrs. M. Shamili
Mrs. R. Vijila Samuel
Mrs. Swathika Arun
Master Sam Pradeep
Miss. Agnes Joseph

**16-Mar**

Mrs. Bina Chrislin
Mrs. Shiju Shanth
Mrs. Elizebeth Pushparani
Master W. Ethan
Master W. Aiden
Mrs. Backiavathy
Miss. K. Sandhiya
Miss. Abreana Richelle
Mrs. Gifta Evnice Ajay
Miss. Olive Jenefa
Mrs. Juliet Arulraj Christian

**17-Mar**

Mrs. Anitha Nesamalar Johnson
Mrs. Rachel Chella Inpah
Master Mano Daniel Stephen
Mr. Henry Maris
Mrs. Jeripa Vizhi
Mr. Vijit Raj V.
Miss. P. Renee Sharon
Mr. Rupert Benjamin

**18-Mar**

Mr. G. Viswam
Master S. Ritish
Mr. Jerub Singh Samuel
Miss. Sharon Flora Oliver
Mr. P. Cecil Joseph
Miss. S. Sowbhagya Raechel Tuhina
Mrs. D. Priya Asha
Miss. D. Martina Shimrith

**19-Mar**

Mr. P. Kennedy Sam Stalin
Miss. P. Laura Abigail John
Master J. Jeffrie Joel
Mr. Jabakumar Vincent J.
Mrs. Salat Anand
Mr. Alwyn Jebakumar Samuel

**20-Mar**

Mr. M. Ayyadurai
Mr. P. David
Mrs. J. Niranjana Vedanand
Mrs. Sheeba Davis
Mr. J. Joyson
Miss. Keren Charis Nirmal
Mrs. Varshini Thambu
Mr. M. Mark Madesh
Mrs. J. Jeroshia Jaslin

**21-Mar**

Mrs. Pushpalatha
Mr. J.S. Jefferson Aaron
Mr. J. Daniel Prince
Mrs. W. Joy Angel

**22-Mar**

Mrs. Daisy Alex
Mrs. Sharmila Jeyakumar
Mrs. Premila Johnson
Miss. M. Mernis Joshil
Mrs. Parimala Dhanaraj
Mrs. Sudha Alwyn
Mr. Paul Niranjan J.
Miss. R. Leona Joyce

**23-Mar**

Miss. Evita Vincy
Mr. Samuel Suresh
Mr. D. Bennet Brown Jaison
Mr. E. Pradeep Kumar
Mrs. Vidhya Debi Jenifer
Mr. V. Clement David
Mrs. P. Venilla
Miss. Jane Chelsea
Master E. Jabez Sanjan Kumar
Ms. A. Pricy
Mrs. Divya Vijay
Miss. Edria Jemiel Embrey
Miss. Joshya Ivana Elza

**24-Mar**

Mrs. Elsi Margaret Manoharan
Baby Isaac Caleb
Mrs. A.P. Jacklin Sowndarya

**25-Mar**

Mrs. Jessie Vedamanickam
Mrs. Mohana Sekar
Mrs. Viola Devapackiam
Mr. D. Victor Isaac
Mrs. Vijila David
Mrs. Mangalam Lawrence
Dr. D. Priyadharshini Sarah Pauline
Mrs. Ezhilarasi Paul
Mrs. Kezia John J.

**26-Mar**

Mrs. Shirley
Mrs. Selina Prakasam
Mr. Sudhahar

**27-Mar**

Dr. Mrs. L.G. Aishwarya Daniel
Mrs. Viola Thomas
Mr. D. Santhosh
Mrs. J. Kulasekari
Miss. Denita Magdalene
Dr. Ebenezer Abishek Bramwell
Mr. Y. James Dickson
Mrs. D. Porchelvi
Mr. K. Balasundaram

**28-Mar**

Mr. D. Anand
Mrs. P. Rebecca Kuppusami
Mr. S. Gerald
Mr. D. Vimal Kumar
Mrs. Mathivathani Selwyn
Mrs. Madhu Walter
Mrs. R. Ebenezer Josephine
Mr. J. Deva Asirvatham Milton
Mr. S.V. Jacob Ebenezer
Baby Aradhana Anne Patricia
Mrs. Priya Singh

**29-Mar**

Mrs. Shalini Joseph
Mr. M. Lawrence
Hepzibah Sangeetha P.

**30-Mar**

Mrs. Prema Dasan
Mrs. P. Saritha Charles
Mrs. S. Anna Pushpam
Mrs. R. Beulin
Mrs. Gracy Loveshiya
Miss. Suji Lydia
Mr. R. John White
Mrs. Prisilla
Mrs. Helen Juliat
Master L. Shawn Mervine
Master Shannon Zion Danis
(S/o. Dr. Subha Venishiya)
Master Danesh Sam Victor J.

**31-Mar**

Mrs. Jeba
Mrs. S. Sunitha Jayam Juliet
Mrs. G. Ophelia Mary

# *Wedding days*

| | |
|---|---|
| **1-Mar** | Mr. Baks - Mrs. Shirley |
| **3-Mar** | Mr. V. Anandan - Mrs. A. Suseela |
| **4-Mar** | Mr. A. Samuel Kirubairaj - Mrs. Jansirekha Samuel |
| **5-Mar** | Mr. John Arthur Sathyaraj - Mrs. Reeta Sathyaraj |
| **10-Mar** | Mr. G. Viswam - Mrs. Manjula Viswam |
| **22-Mar** | Mr. S. Johnson Selvaraj - Mrs. Varalakshmi Johnson |
| **30-Mar** | Mr. S. Pandian - Mrs. Kalavathy Pandian |



## பணித்தளங்களில் மார்ச் மாத ஞாயிறு ஆராதனை விபரங்கள்

| பணித்தளம் | 2-3-25 | 9-3-25 | 16-3-25 | 24-3-25 | 30-3-25 |
|---|---|---|---|---|---|
| **கோயம்பேடு**<br>*காலை 9.30 மணி* | மிஷனெரி பாஸ்கர் | திருமதி சந்திரலேகா ஆல்பர்ட் | திரு. N.C. ஜான் | திருமதி ரேவதி பாஸ்கர் | திரு. ராஜாசிங் |
| **J.J. நகர்**<br>*காலை 7.00 மணி* | மிஷனெரி திருமதி. ஜெபஷீலா ரவி | திரு. யோசுவா அருள்சிங் | திருமதி. Dr. தீபா டேவிட் | திருமதி. ஜெபஷீலா ரவி | திரு. யோசுவா அருள்சிங் |
| **நல்லம்பாக்கம்**<br>*காலை 9.30 மணி* | திரு. மோசஸ் | மிஷனெரி திரு. ஜெபராஜ் | திரு. ராஜாசிங் | திரு. ஜெபராஜ் | திரு. ஜெபராஜ் |
| **சித்தாமூர் சரவம்பாக்கம்**<br>*காலை 10.00 மணி* | திருமதி பியூலா ராஜன் | மிஷனெரி பிரஜாராஜன் | திரு. அகஸ்டின் அண்ணாதுரை | திரு. சார்லஸ் | திரு. பிரஜா ராஜன் |
| **விளங்கனூர்**<br>*காலை 8-9.30 மணி* | திரு. பிரஜாராஜன் | மிஷனெரி பியூலா ராஜன் | திரு. சார்லஸ் | திரு. அகஸ்டின் அண்ணாதுரை | திரு. பிரஜாராஜன் |
| **கரிக்கந்தாங்கல்**<br>*காலை 9.30 மணி* | மிஷனெரி மார்ட்டின் | திருமதி. விமலா மார்ட்டின் | திரு. மார்ட்டின் | திருமதி விமலா மார்ட்டின் | திரு. மார்ட்டின் |
| **விளங்காடுபாக்கம்**<br>*காலை 9-11 மணி* | மிஷனெரி மாதவன் | திரு. சாலமோன் | விக்டோரியா மாதவன் | திரு. மாதவன் | திரு. மாதவன் |
| **புளியம்பேடு**<br>**(காட்டுப்பாக்கம்)**<br>*காலை 9.30 மணி* | திருமதி ரேவதி பாஸ்கர் | திருமதி Dr. தீபா டேவிட் | திரு. பாஸ்கர் | திருமதி ரேவதி பாஸ்கர் | திருமதி ரேவதி பாஸ்கர் |
| **பொறையூர்**<br>*காலை 8.00 மணி* | திருமதி விமலா மார்ட்டின் | திரு. மார்ட்டின் | திருமதி விமலா மார்ட்டின் | திரு. மார்ட்டின் | திருமதி விமலா மார்ட்டின் |

*05.03.2025 சாம்பற் புதன் ஆராதனை மாலை 6.30 மணி*

# பணித்தள செய்திகள்

*அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று,*

*முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன்நிறுத்தம்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். கொலோசெயர் 1:20,21*

மதிப்பிற்குரிய போதகர்கள் சேகர குழுவினர், திருச்சபையார், கன்வீனர், மிஷனரிகள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

2025ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பிரவேசிக்க கிருபை பாராட்டின கர்த்தாதி கர்த்தருக்கு கோடாகோடி ஸ்தோத்திரங்கள்.

பிப்ரவரி மாதம் நம் பணித்தளங்களில் மிஷனரிகள் ஊழியத்தை சிறப்பாக செய்து, ஆராதனைகள் நடத்தி ஆத்துமாக்களை சந்தித்து, ஆண்டவரின் நாம மகிமைக்காக செயல்பட்டார்கள். மருத்துவ முகாம் நடத்துவதற்கும் மிஷனரிகள் அதிக ஆர்வமாக பங்குகொள்கிறார்கள்.

மிஷனெரிகள் சந்தித்து ஜெபிக்கின்ற பிரச்சனையுள்ள மக்கள் வியாதிப்பட்டவர்களுக்காக சபையார் விசேஷமாக ஜெபியுங்கள்.

மருத்துவ முகாம், சுவிசேஷ ஊழியம் 2வது ஞாயிறு மற்றும் 4வது ஞாயிறு மிக சிறப்பாக நடைபெற்றது.

2வது ஞாயிறு - ஜெ.ஜெ.நகர் பகுதியில் மாலை 3 மணிக்கு மருத்துவ முகாம், சுவிசேஷ ஊழியம் நிறைவேற்றப்பட்டது. ஆண்கள் சங்கத்தார் வில்லு பாட்டுடன் தேவசெய்தி கொடுத்து, ஊழியத்தில் பங்கு கொண்டனர். இவ்வாறாக ஊழியத்தின் மூலம் கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது.

145 நபர்கள் மருத்துவ முகாமினால் பயன்பெற்றனர். 3வது ஞாயிறு ஆண்கள் சங்கத்தினர் வில்லு பாட்டுடன் தேவசெய்திகளை கூறி விளங்காடுபாக்கம் கிராமத்தில் ஊழியத்தை நிறைவேற்றினார்கள்.

4வது ஞாயிறு காலை 9 மணிக்கு முதல் ஆராதனை முடிந்ததும் நாகலாபுரம் அருகில் வெங்களத்தூர் குருசேகரத்தில் பெண்கள் சங்கத்தினருடன் சேர்ந்து திருச்சபையாரும் ஊழியம் செய்து மருத்துவ முகாம் 4 டாக்டர்களுடன் நடத்தி மாலை 8 மணிக்கு திரும்பிவர கர்த்தர் கிருபை செய்தார்.

110 நபர்கள் மருத்துவ உதவி பெற்றனர். மார்த்தமா பெண்கள் 28 பேருக்கு மாதாமாதம் வழங்கும் அரிசி முதலிய சமையல் பொருட்கள் பெண்கள் சங்கத்தினரால் வழங்கப்பட்டது.

2 வேன்களில் 42 பேர் பங்கேற்றனர். கிராம மக்கள் அநேகரை சந்தித்து ஆலோசனைகள் வழங்கி ஜெபித்து வழிநடத்தினோம்.

நம் திருச்சபையினர் கிராமத்திற்குள் சென்று, மக்களிடம் கைப்பிரதி, சுவிசேஷ புத்தகங்கள் கொடுத்து சிறப்பாக ஊழியம் செய்தார்கள். சந்தித்த அனைத்து மக்களுக்காகவும், திருச்சபையார்

விசேஷ ஜெபம் ஏறெடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். தொடர்ந்து ஊழியத்தை நாம் நிறைவேற்ற ஆர்வமுடன் பங்குபெற அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நல்லம்பாக்கம் பணித்தளம் மூலம் அருகில் உள்ள அம்மணபாக்கம் குருசேகர ஆயர் அவர்களை சந்தித்து வந்தேன். அவர் நல்லம்பாக்கம் பணித்தள ஆராதனையில் பங்கெடுத்து 1 வாரம் அவர்களுக்கு திருவிருந்து ஆராதனை நடத்தி வருகிறார். அவர் ஒரு வேண்டுகோள் வைக்கின்றார். ‘ஐயா! ஒரு இடம் வாங்கித் தாருங்கள். நாங்கள் இந்தத் சபையை பொறுப்பெடுத்து கொள்கிறோம்’ என்கிறார். திருச்சபையார் விசேஷமாக ஜெபிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்து பணித்தளங்களிலும் ஆலயத்திற்கு சொந்தமாக இடம் வாங்க ஜெபியுங்கள். ஆலயத்திற்கு இடம் வாங்கி, ஆலயம் கட்டிக் கொடுத்த அநேக ஆலயங்களில் இன்றைய தேதியில் ஆத்துமாக்கள் குறைவாக உள்ளனர். ஞானஸ்நானம் பெற்ற மக்கள் யாவரும் ஆராதனையில் பங்குபெறவில்லை. இதற்காக விசேஷ ஜெபங்கள் ஏறெடுக்கப்பட வேண்டும்.

நம் திருச்சபையிலும், நான் நமது பணித்தளங்களுக்காக, மிஷனரிகளுக்காக ஜெபிக்க, ஜெபக் குழு ஆரம்பிக்க மிகவும் விரும்புகிறேன். கடந்தவாரம் சனிக்கிழமை இளம்இல்ல ஐக்கியத்தில் கூடுகையில் பங்கேற்று தேவசெய்தி கொடுத்தேன். தொடர்ந்து அவர்கள் ஏறெடுத்த ஜெபத்தில் பங்குபெற்றேன். அவர்களில் ஒருவர் இளம் இல்லத்தினரின் பிள்ளைகளுக்காக ஜெபத்தை அதிக பாரத்தோடு ஏறெடுத்தனர். அது என் உள்ளத்தைத் தொட்டது. அவர்களிடம் எனது

ஆர்வத்தை பகிர்ந்து கொண்டேன். புதன்கிழமை காலை 10 மணிக்கு நாங்கள் வாராவாரம் ஜெபிக்கிறோம். நீங்களும் வாருங்கள். பணித்தள ஊழியங்களுக்காக ஜெபிப்போம் என வாக்களித்தார்கள். பிற ஐக்கிய சங்கத்தினரும் உங்கள் கூடுகையில் நமது பணித்தளங்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கும்படி மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சிவன்வாயல், அயத்தூர் இந்த பணித்தளங்களை அருகில் உள்ள திருநின்றவூர் தாமரைப்பாக்கம் குருசேகரத்தில் ஒப்படைத்து விட்டோம். இங்கு வந்து மருத்துவ முகாம் நடத்தி, கிராம ஊழியம் செய்து கிராம மக்கள் இன்னும் அநேகம் பேர் அவர்கள் திருச்சபையில் வந்துசேர உதவுங்கள் என கேட்கிறார்கள். ஜெபியுங்கள். நமது பணித்தளங்களில் ஊழியத்தை நிறைவேற்றின பிறகு செய்யலாமா? ஆதரவு தாருங்கள். (குறிப்பாக மருத்துவர்கள்) வாசகுமார், டாக்டர் ஐயா மருத்துவர்களை அழைத்து வருகிற பணியை சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்கள்.

இந்த மாதம் பொதுவாக அநேக காரியங்களை உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். திருச்சபையாரை மீண்டும் தாழ்மையுடன் கேட்கிறேன். பாரத்தோடு தினம் நம் பணித்தள ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, எனக்காக, ஆயர்களுக்காக, செயலர், பொருளர், சேகரக் குழுவினருக்காக, கன்வீனர்க்காக ஜெபியுங்கள். கர்த்தர் இந்த மாதம் முழுவதும் நம்மோடு இருந்து நம்மை பாதுகாத்து ஆசீர்வாதமாக, சமாதானமாக வாழ கிருபை செய்வாராக.

இறைப் பணியில்

**D. ராஜாசிங்**, *ஒருங்கிணைப்பாளர்*